**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 04.03.2026**
**OS. No. 229/2013**
**வழக்கு சாட்சி DW.1– நல்லதம்பி, த/பெ.ராமசாமி**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) நான் வாதி குருசாமி வீட்டிற்கு கிழக்கு பக்கம் குடியுள்ளேன். 2ம் பிரதிவாதி கலைவாணன் பெயரில் தான் நாங்கள் எங்களுடைய சொத்தை கிரையம் பெற்றுள்ளோமா என்றால் ஆமாம். 3ம் பிரதிவாதி கோபால் எங்கள் வீட்டிற்கு கிழக்கு புறத்தில் உள்ளார். அவர் எங்களுக்கு உறவினர் எதுவும் இல்லை. நான் 3ம் பிரதிவாதிக்கும் சேர்த்து தான் சாட்சியம் அளிக்கிறேனா என்றால் ஆமாம். வாதியின் பெரியம்மா சௌந்தர்யா மற்றும் அவரது குடும்பத்தினர் பற்றி எனக்கு தெரியுமா என்றால் கேள்விப்பட்டுள்ளேன். தாவா சொத்திற்கு கிழக்கு பக்கமுள்ள வீட்டை நான் வாடகைக்கு விட்டுள்ளேன். எனக்கு சொந்த ஊர் கொளத்தூரா என்றால் ஆமாம். தாவா சொத்திற்கு எதிர்புறம் நான் 40 வருடங்களாக மெடிக்கல் ஷாப் வைத்துள்ளேன்.

2) நான் 09.09.2011ல் தாவா சொத்திற்கு கிழக்குபுறமுள்ள வீட்டை கிரையம் பெற்றேன். 40 வருடங்களாக நான் தாவா சொத்திற்கு எதிரே கடை வைத்துள்ளதால் வாதி குறித்த விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் CS மணி என்பவரிடமிருந்து என் மகன் 2ம் பிரதிவாதி கலைவாணன் பெயரில் சொத்தை கிரையம் பெற்றேன். மேற்படி CS மணி என்பவர் என் உறவினர் ஆவார், அவரை எனக்கு 40 வருடங்களாக தெரியும். CS மணி அந்த வீட்டை 1988ல் ஜீவா என்பவரிடம் கிரையம் பெற்றார். மேற்படி 1988ம் தேதிய கிரைய பத்திரத்தை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அந்த பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

3) நான் கிரையம் பெற்றபோது தாவா சொத்திற்கு பக்கத்திலுள்ள என் வீடு தரைதளம் மற்றும் முதல் மாடி கான்கிரீட் போட்டு கட்டி முடித்து பூசாத நிலையில் இருந்தது. வாதிக்கும், நான் கிரையம் பெற்ற CS மணி என்பவருக்கும் ஏற்கனவே இடம் சேர்த்து கட்டிவிட்டதாக பிரச்சனை இருந்தது என்றால் எனக்கு தெரியாது. எனக்கு வாதிக்கும், CS மணிக்கும் பிரச்சனை இருந்த விவரம் தெரியும் என்றும், ஆனால் வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் கிரையம் பெற்ற சொத்தானது 825 சதுரடி கொண்ட நிலம் ஆகும். கட்டிடமானது கிழமேல் இருபுறமும் 20 அடியும், மேற்குபக்கம் 41 அடியும், கிழக்குபக்கம் 46 அடியில் அமைந்துள்ளது, சொத்து கிழக்கபக்கம் நீளமாகவும், மேற்குபக்கம் நீளம் குறைவாகவும் உள்ளதால் மொத்த அளவு எனக்கு தெரியவில்லை.

4) நாங்கள் 2011ல் கிரையம் பெற்ற பி.வா.சா.ஆ.4 கிரைய பத்திரத்தில் 810 சதுரடி மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், நான் 825 என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்கண்ட நிலத்திற்கு எத்தனை பட்டா உள்ளது என்றால் ஒரே ஒரு பட்டா தான் உள்ளது. பட்டாவில் அளவு 0.0077.0 சதுர மீட்ட குறிப்பிடப்பட்டுள்ளது. நான் கிரையம் பெற்ற அளவுகளை விட வீடானது அதிக பரப்பில் கட்டியுள்ளோம் என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற சொத்தில் இரண்டு மாடி கட்டிடம் உள்ளது. நான் கிரையம் பெற்ற பிறகு முதல் மாடியில் படி வைத்து, இரண்டாவது மாடி கட்டி, பூச்சு வேலைகள் அனைத்தும் செய்தேன். நான் கிரையம் பெற்ற CS மணி வாதியின் நிலத்தை ஆக்கிரமித்து வீடு கட்டியதால், அவர்களுக்குள் பிரச்சனை இருந்தது என்றும், அதனால் தான் வீடு கட்டுவதை பாதியில் நிறுத்தி வைத்திருந்தார் என்றால் சரியல்ல. CS மணி பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் ஆக்கிரமித்து கட்டியுள்ளதை ஒப்புக்கொண்டு தான் கட்டிடம் கட்டுவதை நிறுத்தி வைத்திருந்தார் என்றும், நான் அவரிடமிருந்து கிரையம் பெற்று அதை கட்டி முடித்துவிட்டேன் என்றால் சரியல்ல. CS மணி 2, 3 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார்.

5) நான் CS மணியிடமிருந்து சொத்தை குறைந்த விலைக்கு வாங்கி, அதில் கட்டிடத்தை கட்டி முடித்துள்ளேன் என்றால் சரியல்ல. CS மணி என் உறவினர்

என்பதால் அவருக்கும், வாதிக்கும் இருந்த பிரச்சனை எனக்கு தெரியும் என்றும், வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் சொத்திற்கு பக்கத்தில் 209 சதுரடி ஆக்கிரமித்து வீடு கட்டியுள்ளேன் என்றும், அந்த இடம் வாதி நடைபாதையாக பயன்படுத்தி வந்தார் என்றும், அதனால் அந்த இடத்தை அவருக்கே நடைபாதையாக பயன்படுத்திகொள்ள நான் கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல. நான் வீட்டை கட்டிவிட்ட பிறகு CS மணியிடம் தெரிவித்து நிலங்களுக்கு தனித்தனியாக பட்டா பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. நாங்கள் வாதியின் நிலத்தை ஆக்கிரமித்து அது அனைத்திற்கும் சேர்த்து தனித்தனியாக 3 பட்டாக்கள் வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல.

6) என் வீட்டின் தலைவாசல் தெற்குபக்கம் உள்ளது. என் வீட்டிற்கு வடக்குபக்கம் 1–1/2 அடி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை. அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் வீட்டின் வடக்கு பக்க சுவரானது நேராக இல்லை என்றால் சரிதான், கிராஸாகதான் அமைந்துள்ளது. நாங்கள் கிரையம் பெற்ற சொத்தானது பிற்படுத்தப்பட்டோர் அதிகம் அமைந்துள்ள பகுதி என்றால் சரிதான். வாதியும், வாதியின் உறவினர்களும் அங்கே அதிகப்படியாக உள்ளார்கள் என்றால் சரிதான். வாதியின் வீட்டிற்கு கிழக்குபுறம் நானும், மேற்குபுறம் சரவணன் என்பவரும் கிரையம் பெற்றுள்ளோம் என்றால் சரிதான். அந்த நிலங்கள் எல்லாம் வாதியின் பங்காளிகளுடையது என்றால் சரிதான்.

7) வாதிக்கு அவருடைய நிலத்தை சுற்றி பாதை இருந்தது என்றும், நாங்கள் நிலத்தை கிரையம் பெற்ற பிறகு அந்த பாதைகளை ஆக்கிரமித்து வீடு கட்டி, பட்டாவும் பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. வாதி பல ஆண்டுகாலமாக முன்னோர்களிலிருந்து தொடர்ந்து பயன்படுத்தி வந்த பாதையை ஆக்கிரமித்து அவரது உரிமைமூலத்திற்கு தடை ஏற்படுத்துகிறோம் என்றால் சரியல்ல. CS மணி கிரையம் பெற்ற பத்திரத்திலும், CS மணியின் முன் விற்பனையாளர் ஜீவா கிரையம் பெற்ற பத்திரத்திலும் வாதிக்குள்ள பாதை குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அதனால் தான் அதை நாங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆரம்பத்தில் தாவா சொத்து

மற்றும் அதனை சுற்றியுள்ள நிலங்கள் அனைத்தும் நத்தம் புறம்போக்கு நிலமாக தான் இருந்தது என்றால் சரிதான், நத்தம் நிலமாக இருந்தது, எனக்கு கிரையம் கொடுத்த CS மணி தான் அதற்கு பட்டா பெற்றார். எனக்கு கிரையம் கொடுத்த CS மணி தனது அதிகாரத்தை பயன்படுத்தி பாதை மற்றும் நான் கிரையம் பெற்ற நிலத்திற்கு பட்டா பெற்று, அது அனைத்தையும் ஆக்கிரமித்து ஒரே சர்வே எண்ணாக செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனக்கு கிரையம் கொடுத்த CS மணி சொத்தை கிரையம் பெற்றபோது 810 சதுரடி தான் அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அதன் பிறகு 15 சதுரடியை ஜீவா என்பவரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார். அந்த 15 அடி தொடர்பான பத்திரம் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த 15 அடி தொடர்பாக தான் வாதிக்கும், CS மணிக்கும் பிரச்சனை இருந்தது என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு 12.03.2026 ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.